செய்தி வெளியீடு **நாள்: 23.11.2024**

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டம் சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் குறித்து அனைத்து துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

••••••••

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (23.11.2024) சென்னை, எழும்பூர், தாளமுத்து நடராசன் மாளிகையில் உள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் வருகின்ற 30-ஆம் தேதி சென்னை, வால்டாக்ஸ் ரோட்டில் நடைபெறவுள்ள அடிக்கல் நாட்டு விழா மற்றும் திறப்பு விழாவின் முன்னேற்பாடு பணிகள் குறித்தும், வடசென்னை வளர்ச்சித் திட்டம் சார்பில் அறிவிக்கப்பட்ட திட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட மற்றும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் மற்றும் பிற துறைகளில் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் தற்போதைய நிலை குறித்தும், அன்னை சத்தியா நகர் பொருள் குறித்தும் அனைத்து துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

வடசென்னை பகுதிகளான திருவொற்றியூர், மாதாவரம், பெரம்பூர், ஆர்.கே. நகர், இராயபுரம், துறைமுகம், திரு.வி.க. நகர், வில்லிவாக்கம், எழும்பூர் மற்றும் கொளத்தூர் ஆகிய 10 சட்டமன்ற தொகுதிகளை மேம்படுத்தும் விதமாக உருவாக்கப்பட்டதுதான் இந்த வடசென்னை வளர்ச்சி திட்டம். வடசென்னையில் சாலையோரம் வசிக்கின்ற மக்களுக்காகவும், பொருளாதாரத்தில் நலிவுற்று இருக்கின்ற மக்களுக்காகவும், அவர்களுக்கு நிரந்தர வாழ்வாதாரம் ஏற்படுத்தி தருகின்ற வகையிலும், அவர்களுக்கு பாதுகாப்பான குடிநீர் வசதி, சீரான கழிவுநீர் வசதி, தடையில்லா மின்சாரம், கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்புகள், போக்குவரத்து வசதிகள், சமூக உட்கட்டமைப்பு, விளையாட்டு, திறந்தவெளி மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் பாதுகாப்பு போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்களை கொண்டதுதான் இந்த வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 14.03.2024 அன்று சென்னை, தங்கசாலையில் ரூ.2,096.77 கோடி மதிப்பீட்டில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 87 திட்டப் பணிகளை துவங்கி வைத்தார்கள். இத்திட்டமானது பல்வேறு துறைகளின் சார்பில் பணிகள் விரிவடைந்து தற்போது ரூ.5,779.66 கோடி மதிப்பீட்டில் 225 திட்டங்களாக அதிகரித்துள்ளது. **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** வருகின்ற 30.11.2024 அன்று சென்னை, வால்டாக்ஸ் சாலை, தண்ணீர் தொட்டி தெருவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் முக்கிய துறைகளின் சார்பில் சுமார் ரூ.1,300 கோடி மதிப்பீட்டில் 80 புதிய திட்டங்களுக்கான தொடக்க விழாவும் மற்றும் 29

Verified by PropEstate ™

முடிவுற்ற பணிகளுக்கான திறப்பு விழாவும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சிக்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து இன்று மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் அனைத்து துறை உயர் அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக மேலாண்மை இயக்குநர் திரு.க.நந்தகுமார், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், இ.ஆ.ப., சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, திரு.ந.ரவிக்குமார், மாநகராட்சி முதன்மைப் பொறியாளர் திரு.ராஜேந்திரன், குடிநீர் வழங்கல் பொறியியல் இயக்குநர் திரு.சிவமுருகன், கண்காணிப்புப் பொறியாளர்கள் (குடிநீர் வழங்கல்) திரு.ராதாகிருஷ்ணன், (நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்) திரு.இளம்பரிதி, (மின்சாரம்) திரு.ஜெயச்சந்திரன், (சிஎம்டிஏ) திரு.ராஜமகேஷ்குமார், நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் திரு.சந்திரசேகர், மண்டல அலுவலர் திருமதி.பரிதா பானு ஆகியோர் கலந்து கொண்டனர்.

Verified RealEstate